**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**
**முன்னிலை – திரு.பி.எஸ். ரஸ்கின்ராஜ், பி.ஏ.,எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.**
**2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02–ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**I.A.No.1/2025 in O.S.191 / 2023**

1. முத்துமாயக்காள்
2. ஜெயவீரணன்
3. தங்கவீரணன்
4. சின்னவீரணன் – மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/ எதிர் /

செந்தில்விநாயகம் – எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்பு 13.11.2025–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.பிரவின்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.குபேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்........

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் Under Section 45 of the Indian Evidence Act and Order 26 Rule 9 and 151 CPC–ன் படி தாக்கல் செய்யயப்பட்ட மனுவாகும்.

**1. மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். தாவா அசல் வழக்கானது, எதிர்மனுதாரர் / வாதியிடம் அல்லிக்கொடி என்பவர் கடன் பெற்றதாகவும், அதற்கு அல்லிக்கொடி 20.05.2021 அன்று கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்ததாகவும், அதில் கண்ட தொகையை அல்லிக்கொடியின் வாரிசுகளான பிரதிவாதிகளிடமிருந்த மீட்டு தரக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி அல்லிக்கொடி வாதியிடமிருந்து கடன் தொகை எதுவும் பெறவில்லை. மேற்படி கடனுக்கு ஆதரவாக புரோநோட் எதுவும் எழுதிக் கொடுக்வில்லை. மேற்படி அல்லிக்கொடி கடந்த 03.03.2022–ல் இறந்துவிட்டார். ஆகையால், மேற்படி கடனுறுதி சீட்டிலுள்ள அல்லிக்கொடியின் கையெழுத்தை தடவியல் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும் என்பதாகும்.

**2. எதிருரையின் சுருக்கம்:–**

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவையாகும். 1ம் எதிர்மனுதாரரின் கணவர் அல்லிக்கொடி

உயிரோடு இருக்கும் போது புரோநோட்டை மறுக்கவில்லை கடனையும் மறுக்கவில்லை. தற்போது மனுதாரர்கள் பின்யோசனை செய்து 1 ½ வருடங்கள் கழித்து இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள். எனவே, மனு அனுமதிக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்ய கூடியது என எதிர்மனுதாரர்களால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

***3.1.*** வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. தாவா வழக்கானது கடந்த 24.04.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் கடந்த 16.10.2023 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார்கள். மேற்படி பதில் அறிவிப்பில் காலம் சென்ற அல்லிக்கொடி வாதியின் தகப்பனார் கட்டளைக்கை முருகன் என்பவரிடமிருந்து 2018–ல் கடன் பெற்றார். குறிப்பிட்ட காலத்தில் மேற்படி கடனை திரும்ப கொடுக்க முடியவில்லை. அதிக வட்டி கேட்பதாக வாதியின் தகப்பனரான கட்டளைக்கை முருகனுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டளைக்கை முருகன் இறந்துவிட்டதால்

அவரது மகன் வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது ஆகும். ஆக, புரோநோட்டில் உள்ள கையெழுத்தை பிரதிவாதிகள் குறிப்பாக மறுக்கவில்லை. வாதியின் தகப்பானரிடமிருந்து கடன் பெற்றதை ஒப்புக்கொண்டு இருக்கிறார். தற்போது 1 ½ வருடங்கள் கழித்து புரோநோட்டில் உள்ள கையெழுத்தை தடவியல் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். எனவே, பிரதிவாதிகளின் தகப்பனார் அல்லிக்கொடி இறந்துவிட்டதால் அவருடைய கையெழுத்து அடங்கிய மூன்று காசோலைகளை தாக்கல் செய்திருக்கிறார். மேற்படி காசோலைகள் அனைத்திலும் அல்லிக்கொடியைப் போன்று எப்போது வேண்டுமானாலும் கையெழுத்து செய்ய இயலும். ஆக, மேற்படி காசோலைகளில் உள்ள கையெழுத்தை வைத்துக் கொண்டு புரோநோட்டிலுள்ள கையெழுத்து அல்லிக்கொடியின் கையெழுத்து தான் என்பதை உறுதி செய்ய முடியாது. தாவா புரோநோட்டானது 20.05.2021–ம் தேதியிட்டது ஆகும். மனுதாரர்கள் அல்லிக்கொடி இறப்பதற்கு 6 மாதங்களுக்கு முன்பாக பதிவு செய்யப்பட்ட அல்லிக்கொடி கையெழுத்து அடங்கிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. ஆகவே, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வழக்கு விசாரணை காலம் கடத்துவதற்காக இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார் என்பது

தெரிய வருவதால் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02-ஆம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.12.02 17:36:54 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>**

--- இல்லை ---

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

---- இல்லை ----

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.12.02 17:36:59 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**I .A.No.1 / 2025 in**

**O.S.191 / 2023**

**நேரிய / வரைவு / உத்தரவு**

**02.12.2025**